**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நெய்வேலி.**

**STC.No. 288 / 2024**

**PW– 1**

2026–ம் ஆண்டு ஜீலை மாதம் 15–ம் நாள் புதன் கிழமை புகார்தாரர் தரப்பின் 1–வது சாட்சியின் சாட்சியம்.

உறுதிமொழிச்சட்டம் 1969 பிரிவு–3ன் படி 15.07.2026 அன்று மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் ஆர்.பாக்யராஜ், எம்.ஏ., பி.எல். அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | சண்முகம் | **தொழில்** | என்எல்சி ஊழியர் |
| **தந்தை பெயர்** | நாராயணன் | **வசிப்பிடம்** | வட்டம் – 26, நெய்வேலி |
| **வயது** | 51 | **தாலுக்கா** | குறிஞ்சிப்பாடி |

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1) நான் என்எல்சியில் நிரந்தர ஊழியராக பணி செய்து வருகிறேன். நான் கடந்த 35 வருடங்களாக என்எல்சியில் பணி செய்து வருகிறேன். நான் ஆரம்பத்திலிருந்தே என்எல்சியில் நிரந்தர பணியாளரா என்றால் முதலில் சொசைட்டியில் பணி புரிந்து பின்பு நிரந்தர பணியாளர் ஆனேன். நிரந்தர பணியாளராக கடந்த 2 வருடங்களாக பணி புரிகிறேன். நான் சொசைட்டியில் பணி புரிந்தபோது பிடித்தம் போக ரூ.18000/– சம்பளம் பெற்றேன். நிரந்தர பணியாளர் ஆனப்பின்பு ரூ.31 ஆயிரம் எனக்கு சம்பளம் ஆகும், பிடித்தம் போக ரூ.15 ஆயிரம் பெறுகிறேன்.

2) எதிரி பாலகுரு எனக்கு 20 ஆண்டுகளாக பழக்கம் என்றால் சரிதான். நானும், அவரும் ஒன்றாக பணி புரிந்த வகையில் எங்களுக்குள் பழக்கம் ஆகும். எனக்கு 3 ஷிப்டுகளும் மாறி, மாறி வரும், அனைத்து ஷிப்டுகளிலும் பணி புரிவேன். என்எல்சி பணி தவிர்த்து எனக்கு வேறு ஏதேனும் வருமானம் உள்ளதா என்றால் இல்லை. எதிரி என்னிடம் ரூ.4,50,000/– லட்சம் பணம் வாங்கியதாக கூறியுள்ள நிலையில் நான் அவருக்கு அந்த தொகையை 06.02.2023 அன்று கொடுத்ததாக கூறியுள்ள நிலையில் எதிரி எப்போது என்னிடம் தொகை கேட்டார் என்றால் அந்த தேதிக்கு ஒரு வாரத்திற்கு முன்பு கேட்டார். அவ்வாறு எதிரி ஒரு வாரத்திற்கு முன்பு என்னிடம் பணம் கேட்ட விவரத்தை நான் இந்த

பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளேனா என்றால் இல்லை.

3) எதிரியும், நானும் ஒன்றாக பணி புரிந்த காலத்தில் எதிரி அவரது வீட்டிலிருந்து லஞ்ச் பேக்கில் ஸ்நாக்ஸ் மற்றும் புத்தகம் ஆகியவற்றை எடுத்து வருவார் என்றாலும், நானும், எதிரியும் ஒன்றாக ஸ்நாக்ஸ் சாப்பிடுவது மற்றும் புத்தகம் படிப்பது வழக்கம் என்றால் எனக்கு ஞாபகமில்லை. நான் எதிரியின் லஞ்ச் பேக்கிலிருந்து ஸ்நாக்ஸ் சாப்பிட்டுள்ளேன் என்றாலும், அவர் எடுத்து வந்த புத்தகங்களை படித்துள்ளேன் என்றாலும், தற்போது வழக்கிற்காக ஞாபகமில்லை என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

4) எனக்கு வட்டிக்கு விடும் பழக்கம் உள்ளதா என்றால் இல்லை. எதிரி என்ன தேவைக்காக என்னிடம் பணம் கேட்டார் என்றால் குடும்ப அவசர செலவு என்று கூறினார். நான் பணத்தை எந்த முறையில் கொடுத்தேன் என்றால் ரொக்கமாக கொடுத்தேன். வங்கியில் இருந்து பணம் எடுத்து கொடுத்தேனா என்றால் என் நண்பர் பன்னீர்செல்வம் என்பவரிடம் இருந்து வாங்கி கொடுத்தேன். இந்த விவரத்தை நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளேளனா என்றால் இல்லை. நான் பணம் கொடுத்ததாக கூறியுள்ள நிலையில் நான் அந்த பணத்தை எதிரிக்கு கொடுத்தபோது யாரெல்லாம் எங்களுடன் இருந்தது என்றால் நானும், எதிரியும் மட்டும் இருந்தோம். என் வீட்டில் வைத்து எதிரிக்கு பணம் கொடுத்தேன்.

5) நான் எதிரிக்கு பணம் கொடுத்த பின்பு எதிரியிடம் அந்த பணத்தை திரும்ப செலுத்துமாறு கேட்டேனா என்றால் இல்லை. நான் புடவை வியாபாரம் செய்துள்ளேனா என்றால் நான் செய்யவில்லை, எதிரி என்னிடம் அந்த வியாபாரம் செய்யுமாறு புடவைகளை கொடுத்தார், நான் அவரிடம் கூலிக்குத்தான் அந்த வியாபாரம் செய்தேன். நான் எதிரிக்கு எப்போது அறிவிப்பு அனுப்பினேன் என்றால் 26.03.2023 அன்று அனுப்பினேன். நான் 20.03.2023 அன்றுதான் வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பினேன் என்றாலும் ஆனால் எனது மனுவில் 24.03.2023 அன்று வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதாக கூறியுள்ளேன் என்றால் எனக்கு தற்போது நீண்ட நாட்கள் ஆனதால் ஞாபகமில்லை. எதிரி பதில் அறிவிப்பு அனுப்பினார் என்றாலும், அந்த அறிவிப்பில் என்னிடம் பணம் வாங்கியதாக ஏதேனும் குறிப்பிட்டுள்ளாரா என்றால் அது எனது வழக்கறிஞருக்குத்தான் தெரியும்.

6) எதிரி எந்த தேதியில் என்னிடம் காசோலையை கொடுத்தார் என்றால் 06.02.2023 அன்று கொடுத்தார். நான் எப்போது வசூலுக்கு தாக்கல் செய்தேன் என்றால் 06.03.2023 அன்று தாக்கல் செய்தேன். எனக்கு திருப்புதல் நமுனா எப்போது கிடைத்தது என்றால் 07.03.2023 அன்று கிடைத்தது. நான் எதிரியிடம் எனது மகனின் படிப்பு செலவிற்காக அடிக்கடி பணம் வாங்குவது வழக்கம் என்றால் சரியல்ல. எதிரி எவ்வளவு மாத சம்பளம் வாங்குவார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியவில்லை. எனக்கு எத்தனை வங்கிகளில் கணக்குகள் உள்ளது என்றால் ஒரே வங்கியில்தான் கணக்கு உள்ளது. எதிரிக்கு

எத்தனை வங்கிகளில் கணக்குகள் உள்ளது என்றால் எனக்கு தெரியாது.

7) நான் காசோலையை எங்கு வைத்து பூர்த்தி செய்தேன் என்றால் நான் பூர்த்தி செய்யவில்லை, எதிரி என்னிடம் கொடுத்தபோதே அதை பூர்த்தி செய்துதான் கொண்டு வந்தார். நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10 ம் வகுப்பு படித்துள்ளேன். நான் தமிழ் வழி கல்வி படித்தேன். அதனால்தான் எனக்கு ஆங்கிலம் தெரியாது என்றாலும், Only என்ற வார்த்தையை அடித்து தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் காசோலையை நான் பூர்த்தி செய்யவில்லை.

8) எதிரியின் கையெழுத்து எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். பொதுவாக ஒரு வாகனத்தை ஒருவரிடமிருந்து வாங்கும்போது TO படிவத்தில் வாகனத்தை விற்றவர் கையொப்பம் செய்தால்தான் வாகனத்தை வாங்கியவர் அவர் பெயருக்கு வாகனத்தை மாற்ற முடியும் என்றால் சரிதான். TN31E7224 என்ற பதிவெண் கொண்ட வாகனம் எதிரி பாலகுரு உடையது என்றால் சரிதான். எதிரியின் கையொப்பம் இல்லாமல் அந்த வாகனத்தை நான் எனது பெயருக்கு TO படிவத்தில் நானே அவரது கையொப்பத்தை செய்துக்கொண்டு மோசடியாக மாற்றிக்கொண்டேன் என்றால் சரியல்ல. அவர்தான் TO படிவத்தில் கையொப்பம் செய்து கொடுத்தார், நானும், எதிரியும் ஒரே இடத்தில் பணி செய்ததால் எதிரியின் பையில் இருந்த காசோலையை எதிரிக்கு தெரியாமல் எடுத்து மோசடியாக இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

9) ரூ.15000/- சம்பளம் வாங்கும் நபரான நான் எனது செலவிற்கே மற்றவர்களிடம் பணம் வாங்கக்கூடிய சூழ்நிலையில் உள்ள நான் என்எல்சியில் பணி புரியும் எதிரிக்கு ரூ.450000/- லட்சம் கடன் கொடுத்ததாக கூறுவது ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. எங்களுக்குள் எந்த பண பரிவர்த்தனையும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. நான் வருமான வரி செலுத்துகிறேனா என்றால் இல்லை. வருமான வரி சட்டத்தின் படி ரொக்கமாக கொடுத்த பணத்திற்கு ஆதாரம் காண்பிக்க வேண்டும் என்றால் நான் எனது நண்பரிடம் இருந்து வாங்கி எதிரிக்கு கொடுத்தேன்.

**(எதிரி தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் கேட்டுக்கொண்டிதற்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வாய்தா தேதி ஒத்திவைக்கப்படுகிறது).**